TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8064836

C

1. District : மாவட்டம் Salem PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 20/AC/2019 Date: நாள் 2/11/2019

2. (i) Act சட்டம்: Crpc Sections பிரிவுகள்: 102 Crpc r/w Sec 7(a)
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: and 7(A) of the Prevention of Corruption (Amendment)
   (iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: Act 2018.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 1/11/2019 Date to : நாள் வரை 2/11/2019.
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 19.00hrs Time to : நேரம் வரை 02.35hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 2.11.2019 Time : நேரம் 15.00hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 2.11.2019 Time : நேரம் 1500hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Information Gathered.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 Km West.
   Beat Number : முறைக் காவல் எண் - (b) Address : முகவரி Sub-Registrar Office, Sankari
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : மாவட்டம் -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Chandramouli (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Sundaram.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56/2019 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
   (f) Occupation : தொழில் Additional Superintendent of Police (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Salem-7 Cherry road, Vincent, Hasthampatti, Salem-7

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. Tmt. S. IndiraGandhi, Sub. Registrar, Sub. Registrar Office, Sankari
   2. Tr. S. Jegadeesan, Assistant, O/o Sub. Registrar, Sankari. Salem
   3. Tr. N. Venkatesan (58/19) S/o Narasimma Rawuth, 14, Nallamanaick Street, Sankari(TK) Salem DT [Private Individual

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps -2T 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Enclosed Separate Sheets.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 2/11/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

Name: பெயர் S. CHANDRAMOULI
Rank: நிலை ADSP No. எண் V&AC, SALEM.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
2/11/2019 - 1700hrs.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/AC/2019 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 7 (a) and 7 (A) மற்றும் 102 Cr.P.C. ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12 ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

சேலம் மாவட்டம், பழைய எடப்பாடி ரோடு, கிராம சாவடி தெரு, கதவு எண். 13 A1 ல் இயங்கி வரும் சங்ககிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர், சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் மற்றும் குழுவினருடன் இணைந்து 01.11.2019 ஆம் தேதி இரவு 19.00 மணி முதல் 1/2.11.2019 02.25 மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டேன். இந்த திடீர் சோதனையானது, சங்ககிரி சார்பதிவாளர் திருமதி.ச.இந்திராகாந்தி மற்றும் சார்பதிவாளர் அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் மேற்படி அலுவலகத்திற்கு பத்திரப்பதிவு, திருமணப்பதிவு, வில்லங்க சான்று நகல் வழங்குதல், பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் அந்த அலுவலகத்தில் செய்ய வேண்டிய இதர பணிகளுக்காக தங்களது அலுவலகம் வரும் பொது மக்களிடம் அரசுக்கு கட்ட வேண்டிய கட்டணம் போக கூடுதலாக, அதாவது தங்களது பதவிகளை தவறாகப் பயன்படுத்தி நேரடியாகவும், பத்திர எழுத்தர்கள், ரியல் எஸ்டேட் புரோக்கர்கள் மற்றும் அவர்களுடைய உதவியாளர்கள் மூலம் கையூட்டு கேட்டு பெறுவதாகவும், கிடைத்த நம்பத்தகுந்த ரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது சங்ககிரி சார்பதிவாளர் திருமதி ச.இந்திராகாந்தி அவர்களின் சரஸ்வதி என பெயர் பொறிக்கப்பட்ட எவர் சில்வர் டிபன் பாக்சை சோதனைக் குழுவினர் திறந்து சோதனை செய்தபோது அதில் ரூபாய் நோட்டுகள் 6 தனித்தனி கற்றைகளாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த ரூபாய் நோட்டுகளை சோதனைக் குழுவினர் எண்ணிப் பார்த்ததில் முதலாவது கற்றையில் ஏழு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,500/–ம், இரண்டாவது கற்றையில் ஆறு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,000/–ம், மூன்றாவது கற்றையில் நான்கு 500 ரூபாய் நோட்டுகள் ஆக

ரூ.2,000/—ம், நான்காவது கற்றையில் ஆறு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,000/— ம், ஐந்தாவது கற்றையில் பதினோரு 2000 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.22,000/—ம், ஆறு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,000/—ம் ஆக மொத்தம் ரூ.25,000/—மும், ஆறாவது கற்றையில் ஒரு 2000 ரூபாய் நோட்டும், இரண்டு 500 ரூபாய் நோட்டுகளும் ஆக ரூ.3,000/—மும் ஆக மேற்படி ஆறு கற்றைகளிலும் சேர்த்து மொத்தம் ரூ.39,500/— இருந்தது. சார்பதிவாளர் திருமதி.இந்திராகாந்தியை சோதனைக்குழுவினர் மேற்படி டிபன் பாக்சில் சரஸ்வதி என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது பற்றி கேட்டபோது அது தன்னுடைய தாயாரின் பெயர் என்று தெரிவித்தார். இந்த சோதனையின்போது சோதனைக் குழுவினர் அவரிடம் அவரது டிபன் பாக்சில் உள்ள தொகைகள் ரூ.39,500/—க்கு விளக்கம் கேட்டபோது அதற்கு அவர் தகுந்த விளக்கம் எதுவும் சொல்லாமல் இருந்தார். அவர் மேற்படி தொகை ரூபாய் 39,500/-க்கு சரியான முகாந்திரம் சொல்லாததாலும், அவர் அந்த தொகைகளை தன்னுடைய டிபன் பாக்சில் வைத்திருந்த விதம் சந்தேகத்திற்குரியதாக இருந்ததாலும் மேற்படி தொகை ரூபாய் 39,500/- டிபன் பாக்சுடன் சோதனைக்குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. பின்னர் அலுவலகத்தில் இருந்த தனி நபர் திரு.வெங்கடேசன் என்பவரை விசாரித்து அவரிடம் உள்ள தொகைகள் குறித்து கேட்டபோது அவர் தனது வலது கையில் வைத்திருந்த இரண்டு பணக்கற்றைகள் மற்றும் தொகைகள் மடித்து வைக்கப்பட்டு, வெள்ளைத்தாள் சுற்றி வைக்கப்பட்டிருந்த ஒரு கற்றை ஆக 3 கற்றைகளை எடுத்து ஆஜர் செய்தார். உட்பக்கமாக . சில விபரங்கள் எழுதப்பட்டிருந்த அந்த வெள்ளைத்தாளை பிரித்து பார்க்க அதில் பணம் இரண்டு கற்றைகளாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. சோதனைக்குழுவினர் அந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்த்ததில் அதில் முதல் கற்றையில் நான்கு 500 ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.2000/—மும், இரண்டாம் கற்றையில் ஒரு 2000 ரூபாய் நோட்டு, மூன்று 500 ரூபாய் நோட்டுகள், நான்கு 100 ரூபாய் நோட்டுகள் அடங்கிய ரூ.3900/—மும் ஆக மொத்தம் ரூ.5,900/— இருந்தது. மேலும் அவர் அந்த வெள்ளைத்தாள் கற்றையுடன் ஆஜர் செய்த மற்ற இரண்டு கற்றைகளில் உள்ள பணங்களை சோதனைக் குழுவினர் எண்ணிப்

பார்த்ததில் முதல் கற்றையில் ஆறு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,000/–மும், மற்றொரு கற்றையில் ஆறு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.3,000/– மும் ஆக மொத்தம் ரூ.6,000/– இருந்தது. மேலும் அவர் தனது அண்டர்வேரின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து இரண்டு கற்றைகளாக தொகைகளை எடுத்து ஆஜர் செய்தார். அதில் முதல் கற்றையை சோதனைக்குழுவினர் எண்ணிப்பார்த்ததில் ஒன்பது 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.4,500/–ம், இரண்டாவது கற்றையில் ஐந்து 500 ரூபாய் நோட்டுகளும், மூன்று 100 ரூபாய் நோட்டுகளும் ஆக ரூ.2,800/–ம் ஆக மொத்தம் ரூ.7,300/– இருந்தது. மேற்படி அனைத்து தொகைகளுமே தான் சற்று முன்பு மற்ற அலுவலர்களுடன் அலுவலக கதவுக்கு அருகில் வெளியே நின்று கொண்டிருந்தபோது திடீர் என்று லஞ்ச ஒழிப்பு துறையினர் வந்து தங்கள் அனைவரையும் அலுவலகத்திற்குள் செல்லும்படி அறிவுறுத்தியபோது அலுவலக கதவுக்கு வெளியில் வைத்தே அலுவலக உதவியாளர் திரு.சௌ.ஜெகதீசன் அவர்கள் மேற்படி தொகைகளை தன்னிடம் மறைத்து வைக்கும்படி ரகசியமாக கொடுத்ததாகவும், அவர் முதலில் கொடுத்த தொகைகளை தான் தனது அண்டர்வேரின் வலதுபக்க பாக்கெட்டில் வைத்ததாகவும், அவர் மீண்டும் தன்னிடம் தொகைகளை கொடுத்தபோது அதை தான் கையில் வாங்கியபோதே லஞ்ச ஒழிப்பு துறையினர் தனது அருகில் வந்து விட்டதால் தான் அந்த தொகைகளை தனது கையிலேயே வைத்து மூடிக்கொண்டதாகவும், தற்போது அதை தங்களிடம் அப்படியே ஆஜர் செய்கிறேன் என்றும் தெரிவித்தார். அவரிடமிருந்த தொகைகள் மொத்தம் ரூ.19,200/–ம் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் உதவியாளர் திரு. சௌ.ஜெகதீசன் அவர்களிடமிருந்து அவாது சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டிலிருந்து ஆஜர் செய்த ரூ.1,200/– க்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி தொகை சோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனைக் குழுவினர் சார்பதிவாளர் அவர்களின் அறையை சோதனை செய்தபோது சார்பதிவாளரின் இருக்கைக்கு வடகிழக்கு மூலையில் தரையில் இரண்டு 500 ரூபாய் நோட்டுகள் ஆக ரூ.1,000/– இருந்தது. மேற்படி தொகை குறித்து சோதனைக்குழுவினர் சார்பதிவாளர் மற்றும் அலுவலகப் பணியாளர்களிடம்

கேட்டபோது அந்த பணம் அங்கு எவ்வாறு வந்தது என்று தங்களுக்கு தெரியாது என்று கூறினர். எனவே, மேற்படி பணம் சோதனைக் குழுவினரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் சோதனைக்குழுவினரால் சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக (1) தனிநபர் தனி உறையில் வைக்கப்படும் பதிவேடு, 2) சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு 2019 தொகுதி III மற்றும் 3) சங்ககிரி சார்பதிவாளர் அலுவலக இயக்கப் பதிவேடு 2019 ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டன. மேலும் சங்ககிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட ஆவணதாரர்களுக்கு வழங்கப்படாமல் பல்வேறு காரணங்களுக்காக ஆவணங்கள் நிலுவையில் உள்ளதாக தெரிவித்த ஆவணங்களின் விபரம் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. திடீர் சோதனையின்போது சங்ககிரி சார்பதிவாளர் திருமதி. ச.இந்திராகாந்தி, உதவியாளர் திரு.சௌ.ஜெகதீசன், இளநிலை உதவியாளர் பா.உமாமகேஸ்வரி, M/s Zigma என்ற தனியார் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டு Camera Operator ஆக பணிபுரியும் திரு.P. மனோஜ்குமார், M/s TCS என்ற தனியார் நிறுவனத்தால் நியமிக்கப்பட்டு Data Entry Operator ஆக பணிபுரியும் திருமதி. S.சசிகலா மற்றும் தனி நபர் திரு. N. வெங்கடேசன் ஆகியோர்களிடம் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. இதர விபரங்கள் இந்த திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை மற்றும் நடவடிக்கையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்களில் விரிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் இந்த சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.60,900/–, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சொத்துக்களை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மேற்படி நடவடிக்கையின்படியும் இதர ஆவணங்களைப் பரிசீலித்தும் மேற்கண்ட எதிரிகள், சங்ககிரி சார்பதிவாளர் திருமதி. ச.இந்திராகாந்தி, உதவியாளர் திரு.சௌ.ஜெகதீசன் மற்றும் தனிநபர் திரு.வெங்கடேசன் அரசுப் பணி செய்வதற்காக கையூட்டு பெறுவது உறுதி செய்யப்பட்டு முதல் நோக்கு இருப்பதாலும், பிடிக்கக் கூடிய குற்றம் என்பதாலும் மேற்படி எதிரிகள் மீது u/s 102 Cr.PC r/w Sec. 7 (a) & 7(A) of

Scanned by CamScanner

Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி குற்றம் புரிந்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

எனவே மேற்கண்ட எதிரிகள் மீது குற்ற வழக்கு பதிய அனுமதி வேண்டி காவல் கண்காணிப்பாளர், மேற்கு சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களிடம் வாய்மொழியான அனுமதி பெறப்பட்டு அதன்பேரில் சேலம் ஊ.த.க. பிரிவு குற்ற எண்.20/AC/2019 u/s 102 Cr.PC r/w Sec. 7 (a) & 7(A) of Prevention of Corruption (Amendment) Act 2018 ன்படி வழக்குப் பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையின் அசலினையும், 1.11.2019ஆம் தேதியிட்ட நடவடிக்கை குறிப்பையும் (Proceedings), நடவடிக்கையின்போது பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.60,900/– ஆகியவற்றை கனம் தனிநீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள் விசாரணை நீதிமன்றம், சேலம் அவர்களுக்கு அனுப்பியும், அதன் ஒரு நகலினை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியும் இந்த வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

2/11/19.

கூடுதல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
சேலம்.